அங்கே இருக்கிற நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுக் கழகம் ஆகியவற்றோடு பேசி, வாங்கும்படியாகச் செய்திருக்கிறோம். அதிலே, இந்த வாகன் தகராறு வருகிறது. இருந்தாலும் அந்த அமைச்சரையும் பார்த்துச் சொல்லியிருக்கிறோம். விரைவிலே அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிடுகிறார்கள். இருக்கிற நிலையிலே அரிசியை வேறுகிடங்குகளிலிருந்து கொள்முதல் செய்து கப்பல் மூலமாக அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம், விரைவிலே ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று இருந்தாலுங்கூட, நம்முடைய கையிருப்பு நம்முடைய தேவைக்கேற்ப இருக்க வேண்டுமென்கிற எண்ணத்தினுடைய அடிப்படையிலேதான் அந்தப் பணிகளையெல்லாம் நாம் ஆற்றிக்கொண்டு வருகிறோம். ஆகவே, மத்திய உணவு அமைச்சர் அவர்கள் அனுதாபத்தோடு அதைக் கேட்டு, இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். தேவைப்பட்டால் மீண்டும் மீண்டும் வற்புறுத்துவோம். அது நடைமுறைப் பிரச்னையாகவும் சிக்கலாகவும் இருப்பதால்தான் இந்த வகையிலே அணுக வேண்டியிருக்கிறது. கொள்கை அளவிலே, கொள்கை வாயிலாக சிலபல முடிவுகள் எடுக்க வேண்டியிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று அனைத்து கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு ஒரு குறிப்பிட்ட கொள்கையிலே மாற்றம் ஏற்பட அவசியம் ஏற்பட்டால் அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று இந்த வாய்ப்பிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. கன்னியாகுமரி—கொட்டாரம் கிராமம் குடிநீர்க் குழாய்கள்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:—'கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கொட்டாரம் கிராமத்தில் உள்ள குடிநீர் குழாய்கள் பழுதுபார்க்கப்பட வேண்டிய அவசியம் குறித்து' திருவாளர்கள், டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், நா. பழனிவேல், சு. முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. டி. மணி.—மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டம் கொட்டாரம் கிராமத்தில் உள்ள குடிநீர்க் குழாய்களில் பழுது பார்க்கப்பட வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—தலைவர் அவர்களே, நான் பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

1981 மே 14] [எஸ். இராகவானந்தம்]

அறிக்கைகள்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கன்னியாகுமரி மாவட்டம், அகத்தீஸ்வரம் வட்டத்திலுள்ள கொட்டாரம் பேரூராட்சியில் மொத்தம் 29 குழாய்கள் பொருத்தப் பட்டுள்ளனவென்றும், அவைகளில் 19 குழாய்களில் குடிநீர் வருவதாகவும், மீதமுள்ள 10 குழாய்கள் மேடான பகுதிகளில் உள்ளதால் தண்ணீரின் அழுத்தக் குறைவினால் குடிநீர் வரவில்லை எனவும் கூறியுள்ளார். மேலும் இந்தக் குறையை நிவர்த்தி செய்ய, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருவதாகவும் மேற்படி வேலை ஒரு மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குமரி மாவட்டம் கொட்டாரம் பகுதியில் பொருத்தப் பட்டு இருந்த குழாய்களில் 10 குழாய்கள் பழுது அடைந்தது. இதற்குத் தண்ணீர் வருகின்ற நீர்த் தேக்கத் தொட்டியிலே போதுமான கொள்ளளவு இல்லை. தண்ணீரே இல்லை. ஆகவே இந்த நீர்த் தேக்கத் தொட்டியை அகலப்படுத்து வதற்கும் விரிவுபடுத்துவதற்கும் 6 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு இருந்தது. அந்தத் திட்டம் இது வரையில் அமுலாக்கப்படவில்லை. ஆகவே இந்த மேல்நிலைத் தொட்டியைத் துரிதமாக அமுலாக்குவதற்கும் குறிப்பாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் தண்ணீர் இல்லாத நேரத்தில் அந்தப் பிரதேச மக்களுக்கு தண்ணீர் கொடுக்கின்ற வகையில் இந்த நீர்த் தேக்கத் தொட்டியை விரிவு படுத்தவும், அகலப்படுத்துவதற்கும் போதுமான குழாய்களை அமைத்துக் கொடுத்து அந்தப் பிரதேச மக்களுடைய குறை களைத் தீர்க்க அவசர நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருவதாகவும் மேற்படி வேலை ஒரு மாதகாலத்தில் முடிந்து விடும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இனிமேல் விரிவாக்குவதோ, உயரமாக்குவதோ செய்தால் இன்னும் 2 மாதங்கள் ஆகிவிடும். இந்த ஒரு மாத காலத் திற்குள் விரைவாகச் செய்து முடிப்பதற்கு வேண்டிய காரியங் களைச் செய்யும்படியாக ஏற்பாடு செய்கிறோம்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகத்தீஸ்வரம் தாலூகா கொட்டாரம் என்ற கிராமத்திலே ஏற்படக்கூடிய குடிநீர்ப் பற்றாக்குறையைப் பற்றி விவர அறிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த கிராமத்திலே ஏற்கனவே குடிநீர்த் தொட்டி இருந்தது. அதன் மூலமாக சப்ளை செய்யப்பட்ட தண்ணீர் போதுமானதாக இல்லை என்று ஏற்கனவே கோரிக்கைகள் விடப்பட்டு 6 ஆண்டுகளுக்கு முன்பாகவே வேறு ஒரு இடத்திலே மேல்நிலை

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1981 மே 14

நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. ஏன் 6 ஆண்டுகள் வரையிலே அதற்கான நடவடிக்கைகளை மக்களுக்கு நன்மை கொடுக்கின்ற விதத்திலே அந்தக் கனக்ஷன்கள் கொடுக்கப்பட வில்லை, என்பது புதிராக இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் புதிதாக தண்ணீர் சப்ளை கொடுக்கின்ற போது ஏற்கனவே இருக்கக்கூடிய கிணற்றை நல்ல முறையிலே ஆழப்படுத்தி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியிலே நல்ல முறையிலே நீர் போதுமான அளவுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. இந்த வேலையை ஒரு மாதத்திற்குள்ளாக முடிப்பேன் என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த காலத் தாமதத்திற்கு யார் காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் கண்டறிந்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் முக்கியமாகச் செய்ய வேண்டிய மீதமுள்ள 10 குழாய்கள் மேடான பகுதியில் உள்ளதால் தண்ணீர் அழுத்தக் குறைவினால் குடிநீர் வரவில்லை என்று தெரிகிறது. எனவே அதன் மூலமாகக் குடிநீர் வருவதைத் தான் இப்போது அவசரமாகச் செய்யவேண்டும். இந்த வேலைகளை எல்லாம் செய்து முடித்தபிறகு மாண்புமிகு உறுப்பினர் மேலும் தண்ணீர் வருவதற்கு வசதியாக, வாய்ப்பு இருக்கக் கூடிய ஆலோசனை சொல்வார்களானால் அது பரிசீலனை செய்யப்படும்.

[முற்பகல் 11-00]

இ: கும்பகோணம் அருகே சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விபத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 54-வது விதியின் கீழ் கும்பகோணம் அருகே சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விபத்துக்குள்ளாவது குறித்துத் திருவாளர்கள் மு. அம்பிகாபதி, தி. கா. நல்லப்பன், செ. சிவசாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1-5-1981 அன்று கும்பகோணம் அருகே சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து விபத்துக்குள்ளானது குறித்த அவசரப் போது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS